# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

## ஊடக அறிக்கை

## ஹட்டன், தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் தரமுயர்த்தல் பணிகள் குறித்த திட்ட வழிநடத்தல் குழுக் கூட்டம்

தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் தரமுயர்த்தல் பணிகள் குறித்த திட்ட வழிநடத்தல் குழுவின் இணை தலைவரும் பிரதி இந்திய உயர் ஸ்தானிகருமான திரு வினோத் கே ஜேக்கப், தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரும் திட்ட வழிநடத்தல் குழுவின் இணைத் தலைவருமான திரு டி.பி.ஜி.குமாரசிறி அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்டிருந்த தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) திருமதி தீபிகா குணரத்ன ஆகியோரின் தலைமையில் ஹட்டனில் உள்ள தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தின் தரமுயர்த்தல் பணிகளை மீளாய்வு செய்யும் கூட்டம் 2021 மார்ச் 23 ஆம் திகதி உயர் ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது. ஒப்பந்ததாரரான பந்தில சிவில் இன்ஜினியர்ஸ் ஆலோசகரான டி எச் விஜயரத்ன ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை - இந்திய அரசாங்கங்களின் உயரதிகாரிகள் இந்த திட்ட வழிநடத்தல் குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

02. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை திட்டத்தின் கீழ் குறித்த பயிற்சி நிலையத்தின் தரமுயர்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இத்திட்டத்தின்கீழ் சாதனங்களை விநியோகிக்கும் அதேவேளை நிர்மாண மற்றும் புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பலகோணங்களிலும் மக்களை இலக்கு வைத்து இலங்கையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பின் பிரதிபலிப்பாக இந்தத் திட்டம் அமைகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்திய அபிவிருத்தி உதவித் திட்டங்களில் கல்வி மற்றும் தொழில்பயிற்சி ஆகியவற்றுக்கு முக்கிய இடம் வழங்கப்படுகிறது.

03. இதுவரையில் இலங்கைக்கான ஒட்டுமொத்த அபிவிருத்தி உதவி திட்டங்களுக்காக 3.5 பில்லியன் அமெரிக்க டொலரிற்கும் அதிகமான தொகையினை இந்தியா வழங்கியிருக்கும் அதேவேளை இதில் 560 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நாடளாவிய ரீதியில் 65 நன்கொடை அடிப்படையிலான திட்டங்கள் இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் 20 திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதற்கான பல்வேறு நிலைகளில் உள்ளன. இலங்கையில் இந்திய அரசாங்கத்தால் அமுல்படுத்தப்பட்ட முன்மாதிரியான திட்டங்களில் இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் சேவை ஆகியவை மிக முக்கியமான திட்டங்களாகும்.

**************

கொழும்பு
23 மார்ச் 2021